**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No.450/2020 P.W. 5 / LW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. மந்திரிகுமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. தர்மராஜ் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 21.09.2022.**

**முதல் விசாரணை**

*1)* நான் தற்பொழுது கருவாக்குறிச்சி காலனியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன ராஜதுரையை எனக்கு தெரியும். 04.02.2020 ஆம் தேதி காலை சுமார் 8- 8.30 மணியளவில் கருவாக்குறிச்சி காலனி நால்ரோடு அருகில் உள்ள கோவில் வாசலில் நான் எனது நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது ராஜதுரை தனது இருசக்கர வாகனத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார். அப்போது அரசுப்பேருந்து கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வேகமாக வந்து இருசக்கர வாகனத்தில் வந்த ராஜதுரை மீது மோதியது.

2) அவ்வாறு பேருந்து ராஜதுரை மீது மோதியதில் அவரது தலை மற்றும் காலில் பலத்த காயம் ஏற்பட்டது. அன்றைய தினம் பேருந்தை ஓட்டியது தர்மராஜ் என்று சொன்னார்கள். காயம்பட்ட ராஜதுரையை சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்க சிகிச்சைக்காக அழைத்துச்சென்றேன். சிகிச்சை பலன் இன்றி ராஜதுரை மறு நாள் இறந்து விட்டார். இது சம்பந்தமாக அசா 1 கொடுத்த புகாரில் போலீசார் என்னை விசாரிக்க நான் நடந்த விவரம் சொன்னேன்.

3) இறந்து போன ராஜதுரை பிரேதத்தின் மீது வடுவூர் போலீசார் பிரேத விசாரணை செய்தார்கள். நானும் உடன் இருந்தேன். ராஜதுரைக்கு இந்த விபத்தின் காரணமாகதான் அவர் இறந்து போய்விட்டார். போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை – குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர் . குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

1) இந்த வழக்கில் இறந்து போன ராஜதுரையும் அசா 1 திருஞானமும் எனக்கு சித்தப்பா உறவுமுறை ஆகும். நாங்கள் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். நான் சம்பவத்தை காளியம்மன் கோவில் வாசலில் நின்று பார்த்தேன். காளியம்மன் கோவில் வாசல்

கிழக்குப்பார்த்து உள்ளது. இந்த விவரத்தை நான் போலீசார் விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) மேற்படி கோவில் நல்லிக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து நான்நின்று கொண்டிருந்த கோவில் சுமார் 300 மீட்டர் துாரத்தில் உள்ளது. சாட்சியிடம் மேற்படி துாரம் குறித்த சந்தேகத்தை இந்நீதிமன்றம் பின்வருமாறு கேட்டு பதிவு செய்கிறது....

| | |
|---|---|
| கேள்வி | 1000 மீட்டர் என்றால் 1 கிமீ என்று தெரியமா? |
| பதில் | தெரியும். |
| கேள்வி | 500 மீட்டர் என்றால் 1/2 கிமீ என்று தெரியுமா? |
| பதில் | தெரியும். |
| கேள்வி | 300 மீட்டர் என்றால் கிட்டத்தட்ட 1/4 கிமீ மேல் என்று தெரியுமா? |
| பதில் | தெரியும். |

நான் சொன்ன துாரத்தில் இருந்து மேற்படி சம்பவத்தை பார்த்திருக்க வாய்ப்பே இல்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன ராஜதுரைக்கு ஓட்டுநர் உரிமமோ, அவரது வாகனத்திற்கு காப்பீடோ இல்லை என்று எனக்கு தெரியுமா? என்றல் எனக்கு தெரியாது. நான்கு ரோடுகள் இணையு் சந்திப்பில் ராஜதுரை நின்று நிதானமாக சாலையை கடக்காமல் வாகனத்தை தாருமாறாக ஓட்டி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. இறந்து போன நபருக்கு உரிமமோ, காப்பீடோ இல்லாததால் அவருக்கு நஷ்ட ஈடு பெறவேண்டும் என்பதற்காக அரசு வாகனத்தை பொய்யாக இணைத்து உருவாக்கப்பட்ட பொய் வழக்கில் புகார்தாரரும், இறந்த நபரும் உறவினர் என்பதால் நான் கண்ணுறற் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

## C.C.No.450/2020 P.W. 6/ LW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. அன்புநாதன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. நடராஜன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 21.09.2022.**

**முதல் விசாரணை**

*1)*நான் தற்பொழுது கருவாக்குறிச்சி காலனியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா 1 முதல் 4 ஐ எனக்கு தெரியும். விபத்தில் இறந்து போன ராஜதுரையை எனக்கு தெரியும். சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை வயலுக்கு சென்றபோது கருவாக்குறிச்சி காலனி அருகில் முக்குளம் செல்லும் நால்ரோடு சாலையில் அரசுப்பேருந்து கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்தது . ராஜதுரை வடக்கில் இருந்து தெற்கு நோக்கி தனது இருசக்கர வாகனத்தில் வந்தார். அப்போது திடீரென ஒரு சத்தம் கேட்டது. அந்த இடத்திற்கு பக்கத்தில்தான் எனது வயல் உள்ளது.

2) அந்த இடத்திலேயே பஸ் நின்றது. நான் சென்று பார்த்தபோது ராஜதுரைக்கு தலை யில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது , அவரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது சாட்சிக் கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை வடுவூர் போலீசாரிடம் நால்ரோடு, பேருந்து நின்ற இடத்தில் வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள், சாட்சிக்கையொப்பம் போடச்சொன்னார்கள்.நானும் சாட்சிக்கையொப்பம் செய்து கொடுத்தேன். **பார்வை மகசரில் கண்டுள்ள கையொப்பம் மட்டும் அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை – குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர் . குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

பார்வை மகசரில் உள்ள கையெழுத்தை சம்பவம் நடந்த மறு நாள் மாலை சுமார் 5 மணிஅளவில் போட்டேன். மேற்படி பேருந்து எங்கள் ஊருக்கு வந்து செல்லும் நகரப்பேருந்து என்று சொன்னால் சரிதான். இறந்த நபரும் உறவினர் என்பதால்

நான் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் நான் எந்த கையெழுத்தையும் போலீசாரிடம் போட்டுக்கொடுக்கவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணத்தில் கையொப்பம் செய்து விட்டு சம்பவ இடத்தில் வைத்து போட்டுக்கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

## C.C.No.450/2020 P.W. 7/ LW 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. தர்மராஜ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. செல்வம் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 21.09.2022.**

**முதல் விசாரணை**

*1)*நான் தற்பொழுது முக்குளம் சாத்தனூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா 5 ஐ எனக்கு தெரியும். விபத்தில் இறந்து போன ராஜதுரையை எனக்கு தெரியும். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சிக் கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி பார்வை மகசரில் கண்டுள்ள எனது கையொப்பத்தை 2020 ஆம் வருடம் 2 வது மாதத்தில் ஒரு நாள் கருவாக்குறிச்சி காலனி , தர்க்காஸ் , நால்ரோடு என்ற இடத்தில் வடுவூர் போலீசார் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள், சாட்சிக்கையொப்பம் போடச்சொன்னார்கள் நானும் சாட்சிக்கையொப்பம் செய்து கொடுத்தேன். **பார்வை மகசரில் கண்டுள்ள கையொப்பம் மட்டும் அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை – குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர் . குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

**பார்வை மகசரில் உள்ள கையெழுத்தை போலீசார் காவல்நிலையத்தில் தயார் செய்ததில் நான் கையெழுத்து செய்து கொடுத்து விட்டு சம்பவ இடத்தில் வைத்து போட்டுக்கொடுத்ததாக நான் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

Sd/-A.S.Ameerdheen,

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.